**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 17–ஆம் நாள், புதன்கிழமை

**<u>இ.ம.எண். 3/2019 இன் அ.வ.எண்.134/2019</u>**

**<u>CNR No. TNSA13-000205-2019</u>**

1. அசோக் (இறந்தவர்)
2. பாமநாதன்
3. சக்திவேல்
4. செல்லம்மாள்
5. சின்னக்கண்ணு
6. தங்கவேலு
7. விஜயா
8. வெற்றி
9. நிர்மலா . . . மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

1. மூசா சாகிப்
2. காதர் பாஷா
3. ரபியா பசிரி
4. நூர்ஜகான் . . . எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது கடந்த 24.10.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும்,

இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>**உத்தரவு**</u>

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவை நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள்.

2. <u>**மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**</u>

மனுதாரர் மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும், மற்ற மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், தேனாம்பிள்ளையூர் கிராமம் சர்வே எண். 5/1A ல் உள்ள சொத்தை பொறுத்து அ.வ.எண்.118/10 என்ற வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து விசாரணைக்காக நிலுவையில் இருப்பதாகவும், மேலும் எதிர்மனுதாரர்/1ம் வாதி மூசா சாஹிப் என்பவர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.113/13 என்ற வழக்கை இந்த மனுதாரர்கள் /பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து விசாரணைக்காக நிலுவையில் உள்ளதாகவும், இருவழக்குகளும் விசாரணைக்காக நிலுவையிலுள்ள நிலையில் மேற்படி வழக்கை தாக்கல் செய்து அவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும், நீதிமன்ற ஆணையர் முறையான அறிவிப்பு கொடுக்காமல் தாவா சொத்தை பார்வையிட்டதாகவும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கல்வியறிவு அற்றவர்கள் என்றும், ஆனால் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்ற ஆணையர் பஞ்சாயத்து சாலையை பார்வையிட சென்றது பற்றி அறிந்திருந்ததாகவும், ஆனால் நீதிமன்ற ஆணையர் அன்றைய தினம் காலையில் வழக்கு சொத்திற்கு சென்றதாக கூறி தலைவாசல் பேருந்து நிலையத்தில் வைத்து 1ம் பிரதிவாதியிடம் மாலையில்

கையெழுத்து வாங்கியதாகவும், நீதிமன்ற ஆணையர் முன் அறிவிப்பு கொடுக்காததால் பஞ்சாயத்து சாலை மற்றும் அதன் முக்கிய பகுதிகளை சுட்டிக்காட்ட இயலவில்லை என்றும், எனவே இந்த மாண்புமிகு நீதிமன்றம், தற்போதுள்ள ஆணையர் வாரண்டை மீண்டும் பிறப்பித்து, வழக்கு சொத்தின் முக்கிய அம்சங்களை குறித்து, நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடுவது நியாயமானது மற்றும் அவசியமானது என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்து 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். அ.வ.எண்.118/2010 மற்றும் அ.வ.எண்.113/2013 ஆகிய இருவழக்குகளும் விசாரணைக்காக நிலுவையில் இருப்பதாக சொல்வது உண்மை என்றும், நீதிமன்ற ஆணையர் தலைவாசல் பேருந்து நிலையத்தில் 3ம் பிரதிவாதி மற்றும் மனுதாரரின் கையொப்பங்களைப் பெற்று, வழக்குச் சொத்துக்களை பார்வையிட்டது குறித்து அவர்களுக்குத் தெரிவித்ததாகக் கூறுவது தவறு என்றும், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது மற்ற பிரதிவாதிகள் வாதியின் நிலத்திலிருந்து பஞ்சாயத்து சாலைக்கு செல்லக்கூடிய பாதை குறித்து, ஆணையரிடம் தெரிவித்ததாகவும், அதனை நீதிமன்ற ஆணையர் குறிப்பிட தவறிவிட்டதாகவும் கூறுவது தவறு என்றும், வசதியுரிமை கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் மாற்று வண்டிப் பாதையை பற்றி குறிப்பிட வேண்டியது அவசியமில்லை என்றும், நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் மனுதாரர்களின் கையொப்பம் அவர்களது வீட்டில் வைத்து பெறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றும்,

மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு முன்கூட்டியே அறிவிப்பு எதுவும் வழங்கப்படாததால், பஞ்சாயத்து சாலையின் மிக முக்கியமான இயற்கை அம்சங்களை சுட்டிக்காட்ட முடியவில்லை என்று கூறுவது தவறு என்றும், மேலும் எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் நிலத்திற்கு செல்லும் மாற்று பாதையை குறிப்பிட வேண்டி நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை மீண்டும் பார்வையிட வேண்டும் என தாக்கல் செய்துள்ள இம்மனு அவசியமற்றது என்றும், தாவா சொத்து குறித்த சரியான விவரங்கள் குறிப்பிடாமல் பிரதிவாதிகள் தங்களது வழக்கிற்கு தேவையான ஆதாரங்களை சேகரிக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்திருப்பதால் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கூறி பதிலுரை தாக்கல் செய்துள்ளனர்.

4. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் இந்த தாவாவை தென்னம்பிள்ளையூர் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண். 5/1ஏ–வில் அமைந்துள்ள வண்டிப்பாதை தொடர்பாக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள்.

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர்களுக்கும்/பிரதிவாதிகளுக்கும், எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கும் இடையே வண்டிப்பாதை தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதிகளின் நிலங்களுக்கு மேற்கில் பஞ்சாயத்து ரோடு அமைந்திருப்பதையும், வாதிகள், பிரதிவாதிகளின் நிலங்களின் அமைவிடத்தையும், தாவா வண்டிப்பாதை

குறித்தும் அதன் இயற்கை அமைப்பு குறித்தும் தெளிவாக சுட்டிக்காட்டி இருப்பது தெரிய வருகிறது. மனுதாரர்கள்/பிரதிாவதிகள் தரப்பில் கூறியுள்ள காரணங்களின் அடிப்படையில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மீண்டும் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமற்ற ஒன்று என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. தீர்வு:

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 17–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.12.17 18:03:23 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

1. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.12.17 18:03:30 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 3/2019 இன்
அ.வ. எண். 134/2019
நாள் : 17.12.2025